REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 6உ வியாழன் (20—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 7உ வெள்ளி (21—12—56) [இதழ் 166

தமிழ் நாட்டிற்கு மேலும் 1,20,000 ஓட்டுப் பெட்டிகள் தேவையாம்!

தேர்தல் செலவுகளுக்கு ரு. 53 இலட்சம் ஒதுக்கப்படுகிறது

வரப்போகும் பொதுத்தேர்தலுக்கு சென்னை மாநிலத்தில் மேலும் 1,20,000 ஓட்டுப் பெட்டிகள் வேண்டியிருக்கும் என்றும், இதற்கு ரூ 8,25 000 செலவாகும் என்றும் கூறப்படுகிறது.

1956—57-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், தேர்தல் செலவுகளுக்கென மொத்தமாக ரூ. 58,08,000 ஒதுக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வெங்காய ஏற்றுமதியிலும் டில்லியின் வஞ்சம்

சென்னையின் ஏற்றுமதிப் பங்கீடு குறைப்பு

தமிழ் நாட்டு வர்த்தகர்களுக்குப் பெரும் ஏமாற்றம், நஷ்டம்

மாநில சர்க்காரின் அலட்சியப் போக்கு!

வெங்காய ஏற்றுமதி, பெரும்பாலும் சென்னை மாநிலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ்நாட்டு வியாபாரிகளுக்கு டெல்லி சர்க்கார், துணிந்து பெரிய வஞ்சகம் இழைத்திருக்கிறது.

இந்த நிலை குறித்து, சென்னை சர்க்கார் ஏதும் கவலைப்பட்டதாகத் தெரியக்காணோம்.

இந்தக் கருத்துக்களை எடுத்துரைத்து, எம். சி. விரபாகு என்ற தூத்துக்குடி தோழர், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழ் ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்; அது கீழே தரப்படுகிறது:—

ஒரு அரை வருட காலத்திற்கு 5 டன் வெங்காயத்தை மட்டும் ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதின் மூலம், வெங்காய ஏற்றுமதி வர்த்தகத்தை நிலைபெறச் செய்யமுடியும் என்று சர்க்கார் உண்மையிலேயே நம்புகிறதா?

சர்க்காரின் முடிவு இதுவானால், கடந்த சில தலைமுறைகளாகவே இந்த ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டு வந்திருக்கின்ற வர்த்தகர்களின் 'தலைவிதி' என்ன ஆகும்?

வெங்காய ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள், 6 மாதங்களுக்கு முன்பே தங்கள் 'கோட்டா' முடிந்த பிறகு, கடந்த செப்டம்பர் மாதத்திற்குள்ளாகப் புதிய 'கோட்டா' தரப்படும் என, ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அளவுக்கு சரக்குகளை வைத்துக்கொண்டு எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இப்போது, 5 டன் ஏற்றுமதிக்கென 'லாட்டரி சீட்டு'களில் ஈடுபட வேண்டிய ஒரு நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்று சென்னையிலுள்ள சில பெற்ற வர்த்தகர்களின் கையில் தான் ஏற்றுமதி வர்த்தகத் துறை இருந்து வருகிறது

ஆந்திரமும் மைசூரும் பிரிந்த பின்னர், அந்த வர்த்தகர்களுடைய ஏற்றுமதி அனுமதியும் படிப்படியாகக் குறைந்து, இப்போது, அந்த முறையே கைவிடப்பட்டு விட்ட நிலையில் இருந்து வருகிறது.

இப்போதிருக்கிற புதிய அமைப்பிலும்கூட, சிற்சில துறைமுகங்களில் ஒரு வர்த்தகரின் உயர்ந்தபட்ச ஏற்றுமதி அளவு 50 டன்களாகவும், மற்றுமுள்ள சில துறைமுகங்களில் அந்த அளவு 30 டன்களாகவும் இருக்கும்போது, சென்னையில் மட்டும், ஒரு வர்த்தகரின் உயர்ந்தபட்ச ஏற்றுமதி அளவு 5 டன்களாக இருக்கிறது.

கப்பல் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, இலங்கைக்கும் மலேயாவிற்கும் போக்குவரத்து வசதிகள் இயற்கையாகவே அமைந்திருப்பதினால் சென்னைக்குக் கிடைக்கும் தண்டனையா இது?

இவ்விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிற எல்லா முடிவுகளுமே வெகு அவசர அவசரமாக எடுக்கப்பட்டிருப்பதாகவே காணப்படுகிறது.

இதனிடையில் சென்னை சர்க்காரோ, தனது வியாபாரிகளின் நலனைக் காப்பதற்கென எந்தவகையான—உருப்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமலிருப்பது உண்மையிலேயே பரிதாபகரமான ஒன்றுதான்!

சென்னையிலிருந்தேதான் சிவப்பு வெங்காயமோ அல்லது சிறு வெங்காயமோ—எதுவானாலும் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது

மற்றப் பொருள்களின் விலையெல்லாம் மிக அதிகமாக உயர்ந்துகொண்டே இருக்கும் இந்நாட்களில்கூட, வெங்காயத்தின் விலை மன எடை ஒன்றுக்கு ரூ. 3 முதல் ரூ. 5 வரைதான் இருந்துவருகிறது.

ஏற்றுமதி செய்வதற்குத் தயாராக இங்கு ஆயிரக்கணக்கான டன் வெங்காயம் இருக்கிறது. ஆனால், ஏற்றுமதி செய்யப்படாமல், துறைமுகங்களிலிருந்து திரும்ப அவற்றை எடுத்து வரும்போது ஏற்படுகிற நஷ்டமும் சேதமும் கணக்கிடமுடியாததாக இருக்கிறது

இதனிடையில், இன்றிருக்கிற நிலையைப்பார்த்தால், அடுத்த வெங்காயச் சாகுபடி வெகு சீக்கிரத்திலேயே இருப்பதால், தேங்கிக் கிடக்கும் இந்த வெங்காயத்தையெல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுமதி செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுமதி செய்யாவிட்டால், ஆயிரக்கணக்கான டன் சிவப்பு வெங்காயம் எதற்கும் உபயோகப்படாமல் கெட்டு நாசமடைந்துபோவது திண்ணம்.

எனவே, இந்த மாநில சர்க்கார் இது விஷயமாக உடனே மத்திய சர்க்காருடன் கலந்தாலோசித்து, குறைந்த பட்சமாகச் சிவப்பு வெங்காயத்தையாவது ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் மூலம் இந்த மாநிலத்தில் பொதுவாக ஏற்றுமதி வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனைப் பாதுகாக்குமாறு அந்த மாநில சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் பிரச்சாரத்திற்கு வானொலி வசதி தரப்படமாட்டாதாம்!

டில்லிப் பேரரசின் முடிவு

புதுடில்லி, டிச. 19—

அகில இந்திய வானொலி மூலமாக அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்களாம்!

காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பி. சோ, ஜனசங் ஆகிய நான்கு அகில இந்தியக் கட்சிகள் மட்டும் தங்கள் தங்கள் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை 10 நிமிடங்களுக்குள் வானொலி மூலம் அறிவிக்க அனுமதிக்கப்படுவார்களாம்!

இந்தத் தகவலை, மக்கள் சபையில் மந்திரி கேஸ்கர் கூறியிருக்கிறார்.

இந்த முடிவினை, தீவிரமான சிந்தனைக்குப் பிறகே—பல நாட்டு நிலைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பரிசிலித்த பிறகே மேற்கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும், வானொலி மூலம் பிரச்சாரம் செய்ய வசதி செய்து தருவது மிகக் கடினமாயிருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மொழிக் கஷ்டம்

"வானொலியைத் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதிக்கும் நாடுகளில் மொழிக் கஷ்டம் இல்லை; ஒரே மொழியில்தான் அங்கு பிரச்சாரம் நடத்தப்படுகிறது; ஆனால் இங்கு அப்படி ஒரு நிலைமை இல்லை.

'சுவிஸ் நாட்டில் மூன்று ஆட்சி மொழிகள் இருக்கின்றன; ஆனால் அங்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வானொலி உபயோகிக்கப்படுவதில்லை," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டசபையில் கை குலுக்கலாமா?

போபால், டிச. 20—

'கை குலுக்குவது இந்தியக் கலாச்சாரத்திற்கு ஏற்றதா? எந்தச் சமயத்தில் கை குலுக்கலாம்?' என்ற பிரச்சினை, மத்தியப் பிரதேச சட்டசபையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

மல்யுத்தம் செய்யும்போதும், திருமண நேரங்களிலும் மட்டுமே கை குலுக்கும் பழக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் சட்டசபையில் பதவி ஏற்புப் பிரமாணம் முடிந்தவுடன் கை குலுக்குவது கூடாது என்றும் ஒரு உறுப்பினர் கூறினர்.

சபைத் தலைவர், இதற்குத் தக்க விளக்கம் தரவில்லை.

விபசாரம் நடத்த அரசியல் சட்டத்தில் உரிமை!

'சட்டம் திருத்தப்படவேண்டும்' என்கிறார் துர்காபாய்

கல்கத்தா, டிச. 18—

பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்தும் தொழிலை அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைக்கு உடன்பாடானதாகக் கருதலாமா?

ஒரு சமூக சேவா மாநாட்டில் பேசிய திருமதி துர்காபாய் தேஷ்முக் இந்தக் கேள்வியை எழுப்பிவிட்டு, 'உண்மைதான்; அடிப்படை உரிமைதான்,' என்று பதிலும் கூறினாராம்!

வழக்கு

வழக்கு ஒன்றில், பெண்களை வைத்து விபசாரம் நடத்தியவர், தான் அப்படி நடத்தும் தொழில், அரசியல் சட்டத்தில் 'எந்தத் தொழிலும் நடத்த சுதந்திரம் உண்டு' என்று கூறப்பட்டிருக்கும் உரிமையினால் நியாயமானதாகும் என்று வாதாடி வெற்றி பெற்றார் என்று துர்காபாய் அம்மையார் எடுத்துக்காட்டி, 'இது என்ன வகையான சுதந்திரமான தொழிலோ? என்று கேட்டிருக்கிறார்.

'அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியது மிக மிக அவசரமானதாகும்,' என்றும் அவர் எழுத்துரைத்திருக்கிறார்.

மகாகுஜராத் ஆர்ப்பாட்டம் நீடிக்கிறது

முதன் மந்திரிக்கு கருப்புக் கொடி வரவேற்பு

கண்ணீர்ப்புகை, தடியடி தாராளப் பிரயோகம்

அகமதாபாத், டிச. 19—

'மகா குசராத் மாநிலம் அமைக்கவேண்டும்; முதன் மந்திரி சாவன் அவர்களே! திரும்பிப் போ' என்ற கோஷங்களுடன், பம்பாய் முதன் மந்திரி சாவன் இங்கு வந்தபோது, அவரை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றிருக்கின்றனர், மகா குசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள்!

கண்ணீர்ப் புகை, தடியடி!

ஆர்ப்பாட்டக்காரர்மீது போலீசார் பலமுறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்

தடியடியும் வெகு தாராளமாக உபயோகிக்கப்பட்டதாம்!

காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த அவர், ஆர்ப்பாட்டக்காரர்கள் 'காங்கிரஸ் மாளிகை' முன்கூடி, ஆர்ப்பாட்டம் நடத்துவதையும் கண்டாராம்!

அவரது கார் பலமுறை கல்லெறிக்கு ஆளாக்கப்பட்டதாம்; ஆனால் அவர் ஒருமுறைகூட அந்தக் காரில் இருக்கவில்லையாம்!

காரில் பிரயாணம் செய்த குஜராத்தி பிரதேச காங்கிரஸ் தலைவர், மற்றும் இந்துமதி சிமன்லா என்ற மந்திரி ஆகியவர்கள் அந்தக் காரில் பிரயாணம் செய்தபோது, அவர்களை காரைவிட்டுக் கீழிறக்கிக் கலாட்டா செய்யவும் ஆர்ப்பாட்டக்காரர் முயற்சித்தனராம்.

அர்த்தால்

மகாகுஜராத் ஜனதா பரிஷத் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இன்று அகமதாபாத் நகரில் பள்ளிகள், கல்லூரிகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் மூடப்பட்டு, 'அர்த்தால்' அனுஷ்டிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

பலத்த பாதுகாப்பு

'காங்கிரஸ் மாளிகை'யில் ஊழியர் கூட்டம் நடைபெற்றபோது, அதன்முன் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாளிக்க பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

இரயில்வே ஊழியர்களுக்கு 'பென்ஷன்' திட்டம்

புதுடில்லி, டிச. 18—

இரயில்வேக்களில் பணியாற்றுபவர்களுக்கு 'பென்ஷன்' திட்டம் ஒன்றை விரைவில் அமுலுக்கு கொண்டுவர உத்தேசித்திருப்பதாக இரயில்வே அமைச்சர் செகசிவன்ராம் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

தற்போது பணியாற்றுவோர் விரும்பினால் இந்தத் திட்டத்தை ஏற்கலாம்; ஆனால் புதிதாக வேலைக்குவரும் ஊழியர்களுக்குக் கட்டாயமாக இந்த திட்டம் அமுல் செய்யப்படுமாம்.

ஐ. நா.-வில் ஜப்பான்!

ஜப்பான் ஐ. நா. ஸ்தாபனத்தில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டது.

நம் நாடு

சென்னை 20-12-'56 வியாழன்

மூன்று திங்களுக்குள்!

இன்னும் சில ஆண்டு காலத்திற்குள் படிப்படியாகக் கைத்தறிகளை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக விசைத்தறிகளைப் புகுத்தியாகவேண்டும் என்பது இந்தியப் பேரரசின் புதிய நெசவுக்கொள்கையாகும். அப்புதியக் கொள்கையில் கூடிய வருவாயும் வாழ்க்கைத் தர உயர்வும் நெசவாளர்களுக்குக் கிடைக்கக்கூடும் என இந்தியப் பேரரசின் சார்பில் மிகைபடக் கூறப்பட்டு வந்திருக்கிறது.

இப்புதிய நெசவுக் கொள்கைக்கு, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் உள்ள கைத்தறியாளர்களிடமிருந்து பலமான எதிர்ப்பு கிளம்பியது.

விசைத்தறியினால் நெசவாளர்களின் வருவாய் கூடவும் வாழ்க்கைத்தரம் உயரவும் முடியாது என்பதற்காக அல்ல, அப்பலத்த எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், விசைத் தறியின் துணைகொண்டு சில நெசவாளர்கள் அதிகமான வருமானம் பெறுவது எவ்வளவு சாத்தியமானது எனக் கூறப்படுகிறதோ, அதனிலும் கூடுதலான வகையில் ஒவ்வொரு விசைத்தறிக்கும் குறைந்தபட்சம் ஆறு நெசவாளர்களின் வாழ்க்கை நசித்துப்போவதும் நிச்சயமானதாகும் எனத் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. இதன் விளைவாக, இமயம்போல் ஓங்கியுள்ள வேலையின்மைக் கொடுமை, பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்து தவிப்பதின் காரணமாக, மேலும் கூடுதலாவதற்கு இடமேற்பட்டுவிடுவது திண்ணம் என எச்சரிக்கப்பட்டது.

நெசவாளர்களின் தீவிரமான கண்டனங்களையும் அரசாங்கத்தின் புதிய நெசவுக் கொள்கைக்கு எதிராக அவர்கள் காட்டிய நியாயங்களையும், இந்தியப் பேரரசு செவிகொடுத்துக் கேட்கவும் முடியாது எனப் பிடிவாதமாக மறுத்துவிட்டது. எவர் எதிர்த்தாலும் சரி, விசைத் தறியைத் திணித்துத் தீருவதென்று, கட்டிய முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என விதண்டாவாதம் பேசியது.

பேரரசின் ஆணைக்கொப்ப ஆடித் தீரவேண்டிய கட்டாயத்திலிருக்கும் மாநில அரசாங்கங்களும், தம் தம் மாநிலங்களிலும் விசைத் தறித் திணிப்புக்கான நாளையும் குறித்துவிட்டன. அதற்கான பெருந் தொகையையும் ஒதுக்கிவிட்டன. விசைத் தறியைக் கொள்முதல் செய்யவும் தொடங்கிவிட்டன.

இந்த நடைமுறையின் ஒரு பகுதியாக சென்னை அரசாங்கமும், உடனடியாகச் செயல்படத் தொடங்கியது. அது பற்றிய உண்மையை ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சென்னை சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலனார் அவர்களும் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த ஆண்டில் 3,000 விசைத்தறிகளும், அடுத்த ஆண்டில் 3,000 விசைத் தறிகளும் புகுத்துவது என அரசாங்கம் முடிவிற்கு வந்திருக்கிறது"

சென்னை சட்டசபையில் மேற்குறிப்பிட்டுள்ளபடி கூறியிருப்பவர் தொழில் அமைச்சர் பக்தவத்சலனார்தான் என்பதை மறந்துவிடாதீர்கள். அவருடைய மேற்படி கூற்றை மேலும் உறுதி செய்யும்வகையில், அதே நேரத்தில், பின்வருமாறு தொடர்ந்தும் கூறியுள்ளார்.

"கைத்தறிப் புள்ளி விவரப்படியும்கூட, மாகாணத்திலிருந்துவரும் 5-லிருந்து 6 இலட்சம் கைத்தறிகளில் 1.57 இலட்சம் தறிகள் மட்டுந்தான் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எனவே, 6,000 கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றி அமைப்பதினால், கைத்தறிகளோ, நெசவாளர்களோ பெருங்கேட்டிற்கு உள்ளாக மாட்டார்கள்."

எதிர்ப்பாளர்கள் கூறிவரும் இரண்டு நியாயங்களை மறுக்கும் வகையில், கைத்தறிகளும் நெசவாளர்களும் எவ்விதப் பெருங் கேட்டிற்கும் உள்ளாக மாட்டார்கள் என அபயமளித்து பேசியுள்ளவரும் அதே அமைச்சர் பக்தவத்சலனார்தான் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வோமாக.

விசைத் தறித் திணிப்பு ஏற்பாடு யாருடையது என்பதையும், அவ்வேற்பாட்டை சென்னை அரசாங்கம் எவ்வாறு கருதுகிறது என்பதற்கான விளக்கத்தையும் தெளளத் தெளிய அதே அமைச்சர், அப்பொழுதே தொடர்ந்து அறிவித்துள்ளார்.

அது, இது:

"சில கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றி அமைப்பது என்ற இந்தியப் பேரரசின் ஏற்பாட்டை சென்னை அரசாங்கம் எதிர்க்கவில்லை."

அமைச்சரின் இவ்வாயுரையையும் நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நிற்க,

சென்ற மாத இறுதியில் முதலமைச்சர் கனம் காமராசர் அவர்களை, கோவை நகரில், கைத்தறி நெசவாளர் தூதுக் குழு சந்தித்து, விசைத் தறித் திணிப்பைக் கைவிடுமாறு வேண்டிக்கொண்டுள்ளது. அது கேட்டு முதலமைச்சர் சீற்றம்கொண்டவராக,

"விசைத் தறித் திணிப்பை சென்னை மாகாண நெசவாளர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக விசைத் தறி வாங்குவதை இந்தியப் பேரரசு நிறுத்திக் கொள்ளாது,"

என்று, தூதுக் குழுவின் கன்னத்தில் அறைந்ததுபோல் பதிலளித்துள்ளார். அந்த மட்டோடும் அவர் நின்றுவிடவில்லை.

வேறு சில மாகாணங்கள் விசைத்தறி ஏற்பாட்டிற்கு ஆதரவாக இருப்பதாக முதலமைச்சர் குறிப்பிட்டுவிட்டு, அதுபற்றி அமைதியான சூழ்நிலையில் ஆராய்ந்து முடிவு கூற நெசவாளர்கள் முந்தவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

அவ்வாறு கோரினதுடனும் அவர் இருந்துவிடவில்லை. மேலும் சென்று, நயமை நையாண்டி செய்வதாகக் கருதிக்கொண்டு கீழ் குறிப்பிட்டுள்ளதுபோலும் கூறியுள்ளார்.

"தொழில் துறையில் வட இந்தியா பெரிய அளவில் முன்னேறிவிடும்; அந்த நிலை ஏற்பட்டால், தெற்கே உள்ள நெசவாளர்கள், தென்னிந்தியா அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது எனக் கூப்பாடுபோடுவார்கள்."

மூன்று திங்களுக்குமுன்பு அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் சட்டசபையில் கூறியுள்ளதற்கு மாறாகவும், ஒரு திங்களுக்குமுன் முதலமைச்சர் கோவையில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாகவும், இத்திங்கள் பதினேழாந்தேதி நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் எழுந்த கேள்வி ஒன்றுக்கு, தொழிலமைச்சர் பக்தவத்சலனார், 'விசைத்தறிகளை ஏற்படுத்துவதை எதிர்க்கிறோம் என்பதே அரசாங்கத்தின் கொள்கை; இப்பிரச்சினையில் மத்திய, மாகாண அரசாங்கங்களுக்கிடையே முரண்பாடு ஏதுமில்லை" என அறிவித்துள்ளார்.

மூன்று திங்களுக்குமுன் விசைத்தறித் திணிப்பு பற்றி சட்டசபையில் தொழிலமைச்சர் குறிப்பிட்டுள்ளதற்கும், இன்று அதே தொழிலமைச்சர் அதே சட்டசபையில் விசைத்தறி குறித்துப் பேசியுள்ள பேச்சுக்கும், இத்தகைய முரண்பாடு இருக்கக் காரணம் என்ன?

விசைத் தறித் திணிப்பு ஏற்பாட்டிற்கு சென்னை அரசாங்கம் இறுதியாகத் தலைமுழுக்குப் போட்டுவிட்டதா? அல்லது இற்றைக்குவேண்டாம், தேர்தலுக்குப் பிறகு திணித்துக்கொள்வோம என்ற தீர்மானத்திலிருக்கிறதா?—என்பதின் உண்மை தெளிவாகத் தெரிந்தாகவேண்டும்.

நெய்வேலித் திட்டத்திற்கு இயந்திரங்கள்

மக்கள் சபையில் தகவல்

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலைகளுக்கென ரூ. 5,50,00,000 மதிப்புள்ள இயந்திரங்களுக்கு இந்திய சர்க்கார் ஆர்டர்கள் கொடுத்துள்ளதாம்!

நெய்வேலிச்சுரங்கத்தின் ஆரம்ப அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவைப்படும் சாதனங்கள் பற்றிய குறிப்புகள் தருவதற்காக, பவல் டப்பின் டெக்னிக்கல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 12,500 கொடுத்திருப்பதாகவும், அவர்கள் தயாரித்து அனுப்பியிருந்த திட்ட ரிப்போர்ட்டுகளுக்காக ரூ 20,000 கொடுத்திருப்பதாகவும், மக்கள் சபையில் அமைச்சர் ஒருவர் தகவல் தந்திருக்கிறார்.

பஞ்சாபில் செய்தித் தாள் தொழிற்சாலை

ரூ. 4 கோடி செலவில் உருவாக்குவதற்கு முயற்சி

7,000 பேருக்கு வேலைகிடைக்கும்

சந்திகார், டிச 18—

பஞ்சாப் மாநிலத்தில் செய்தித்தாள் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது சம்பந்தமாக ஒரு தனிப்பட்ட நிறுவனத்துடன் பஞ்சாப் அரசாங்கம் யோசித்து வருகிறதாம்.

இந்த தொழிற்சாலையில் 7,000 பேர்களுக்கு வேலை கிடைக்குமாம்.

இதற்கு ரூ 4 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கைத்தறித் துணைக் கருவிகள்

தயாரிப்பு உலை!

சேலத்தில் ஏற்படுத்தப்படும்?

புதுடில்லி டிச. 18—

கைத்தறித் துணைக் கருவிகளையும், சாதனங்களையும் தயாரிப்பதற்கான உலை ஒன்றை ஏற்படுத்துவதற்காக சென்னை சர்க்காருக்கு அக்டோபர் மாதத்தில் சுமார் ரூ. 14,50,000 கடன் தொகை அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும், அக்கடன் தொகையில் முதல் தவணையாக பாதித் தொகை அந்த மாநில சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அமைச்சர் மொரார்ஜி தேசாய் மக்களவை சபையில் தெரிவித்துள்ளார்.

அந்த உலையை சேலத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதற்கான திட்டத்தை மாநில சர்க்கார் அங்கீகரித்து உத்தரவுகள் பிறப்பித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

3½ - இலட்சம் தறிகள் பதிவாகியுள்ளனவாம்!

சென்னை, டிச. 18—

சென்னை மாநிலத்தில் இதுவரை 3½ இலட்சம் தறிகள் பதிவாகியுள்ளன என்றும், இது மொத்தத் தறிகளில் 75 சதவிகிதமாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பதிவான தறிகளுக்கு நற்சான்றிதழ், தொடர் எண்ணிட்டு வழங்கப்பட்டுள்ளதாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்னும் பதிவு வேலை துவக்கப்படவில்லையாம்.

தறிகளைப் பதிவு செய்வதற்கு நாட்டில நிலவி வந்த எதிர்ப்பு தற்போது இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் 4 நெசவுப் பயிற்சி நிலையங்கள்

சென்னை, டிச 19—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுபவர்களுக்குப் பயிற்சி அளிக்க நான்கு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

சேலம், கடலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். இங்கு 25 பேர்களுக்கு கைத்தறி சம்பந்தமான நுணுக்கப் பயிற்சியும், தற்கால நாகரீகத்திற்கு ஏற்றவாறான தயாரிப்புக்கும் நவீன முறைகளில் பயிற்சியளிக்கப்படுமாம். இதற்கு ரூ. 25,000 செலவிடப்படுமாம்.

மன்னார்குடியில் சர்க்கரை தொழிற்சாலை அமையும்

நாள் ஒன்றுக்கு 800 டன் சர்க்கரை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடியில் அமைக்கப்படுமாம்.

அடுத்த ஆண்டு ஜூலை முதல் இந்தத் தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபடுமாம்.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று போலந்து நிறுவனமொன்றிற்கும் தஞ்சையிலுள்ள சம்பகா சர்க்கரை நிறுவனத்திற்குமிடையில் கையொப்பமாகியுள்ளதாகத் தெரிகிறது.

தமிழகத்தில் வர்ணக் கல் படிவங்கள்!

தாராபுரம், டிச. 17—

காங்கயம் பகுதியைச் சேர்ந்த சிவன்மலை கிராமம், மஜரா காடையூர் கிராமத்தின் சாலை ஓரத்திலுள்ள ஓர் கிணற்றுக்கு பரவலாகப் பச்சைக் கல் படிவங்கள் இருக்கின்றனவாம்!

சிவன்மலை கிராமத்தில் வெள்ளைக் கல் படிவம் காணப்படுகிறதாம்.

பரஞ்சேர்வழி கிராமம் மதராசி வியாபாரியத்தில் நீல வெள்ளை கலந்த கல் படிவங்கள் பரவலாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய துணைக்கண்டத்தின்

அடுத்த தலைவர்

இராசேந்திர பிரசாத் நிலைமை

புதுடில்லி, டிச. 18—

இந்தியத் துணைக்கண்டத்தின் தலைவராக இரண்டாது முறையாகவும் நிறுத்திவைக்கப்பட, இப்போதைய தலைவரான இராசேந்திர பிரசாத் ஒப்புதல் அளித்துள்ளாராம்!

தாம் இந்தப் பதவியிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டுமென அவர் ஒரு முறை நினைத்த போதும்கூட, இப்போது காங்கிரசின் தலைமைப்பீடத்திலுள்ள தலைவர்களைப் போலவே பொதுமக்களும் கொண்டுள்ள ஒருமித்த ஆசைக்கும் வேண்டுகோளுக்கும் கட்டுப்படவேண்டும் என்ற எண்ணம் தமக்கு இருப்பதாலேயே, மீண்டும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்திவைக்கப்பட அவர் ஒப்புதல் அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வருகிற ஆண்டு மே திங்கள் 10-ந் தேதியுடன், அவருடைய குடியரசுத் தலைவர் பதவிக்காலம் காலாவதியாகிறது.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள காலமான வருகிற ஏப்ரல் திங்களுக்கு முன்னதாக, இராசேந்திரர் அநேகமாக வருகிற பிப்ரவரியில் 'கண் ஆபரேஷன்' செய்துகொண்டு சில நாட்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்வார் என்றும் தெரிகிறது.

தென்னாட்டில் தொழில் நுட்பக் கழகம்

ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நிறுவப்படக்கூடுமாம்

இந்நாட்டில் உயர் தொழில் நுட்பக் கழகமொன்று நிறுவுவதில் உதவியளிக்க அமெரிக்கா முன்வந்திருப்பதாயும், மேற்கு ஜெர்மனியும் ஒரு கழகம் அமைத்துத் தருவதற்குத் தயாராக இருப்பதாகவும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'தென்னிந்தியாவில் வேலையில்லாத்திண்டாட்டம் கடுமையானதாக இருப்பதைக் கருதி இக்கழகம் அங்கு அமைக்கப்படுமா?' என்று கேட்டபோது, தென்னாட்டில ஒன்றும், வடநாட்டில் ஒன்றும் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் பிற்பகுதியில் இவை அமைக்கப்படுமென்றும் பதில் தரப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலில் பெட்ரோல் கட்டுப்பாடு?

அடுத்த பொதுத் தேர்தலின் போது பெட்ரோல் கட்டுப்பாடு வரும் என்று பயப்பட வேண்டியதில்லை என மராமத்து அமைச்சர் சர்தார் சுவரண் சிங் மக்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 'சூயஸ் கால்வாய் மூடப்பட்டு இருப்பதால் இந்தியாவில் பெட்ரோல் நெருக்கடி ஏதும் ஏற்படவில்லை,' என்றும் அவர் கூறியுள்ளார்.

சகாரா பாலைவனம் தரும் செல்வம்!

சகாரா பாலைவனப் பகுதிக்கென ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்துவதை பிரெஞ்சுப் பார்லிமென்டும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அந்தப் பாலைவனத்திலுள்ள இயற்கை வளத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கு வாழும் மக்களின் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பிரான்சுக்கு ஆண்டுதோறும் 50,00,000 டன் எண்ணெய் கிடைக்குமெனத் தெரிகிறது.

நிலக்கரி, யுரேனியம், செம்பு, மாங்கனீஸ் முதலிய உலோகங்களும் இங்கு நிறைந்து இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

'சென்னை அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு முயற்சிக்கவில்லை'

'ஒரு நெய்வேலித் திட்டத்தையே சர்க்கார் பெரிதாக்கிக் காட்டுகிறது'

பல 'நெய்வேலி'களிருப்பினும் வேலையில்லாத் திண்டாட்டம் குறையாதே!

தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் கருத்து

"நாட்டைத் தொழில்மயமாக்குவதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்; ஆனால், மற்ற மாநிலங்களெல்லாம், தங்கள் தங்கள் மாநிலத்தில் தொழில்களைத் துவங்கவேண்டும் என்பதற்கான முயற்சிகள் அனைத்தையு மேற்கொண்டிருக்கும்போது, சென்னை மாநில அரசாங்கம் இது குறித்துக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை; இதுவரையில் தொழில்துறையில் எந்தவித நடவடிக்கையையும் இந்த மாநில சர்க்கார் மேற்கொள்ளவில்லை. இதனால் இன்று இந்நாட்டில் வேலையற்றுத் திண்டாடுவோரின் எண்ணிக்கை மிக அதிகமாகப் பெருகிவிட்டிருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை அவர்கள் எப்படித்தான் நிவர்த்தி செய்துகொள்ளப்போகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது நான் மிக ஆச்சரியப்படுகிறேன்

"தொழில் துறையைப் பொறுத்தவரையில் நாம் எதைக் கேட்டாலும், சொன்னாலும் இம்மாநில சர்க்கார், நெய்வேலி திட்டத்தை மட்டும் சுட்டிக்காட்டிவருகிறது. ஆனால் நமக்கு ஒரு நெய்வேலித் திட்டம் மட்டும் போதுமானதல்ல; ஒரு நெய்வேலியைப்போல் பல நெய்வேலித் திட்டங்கள் நமக்கிருந்தாகவேண்டும்"

—என்று, சென்னைத் தொழிலதிபரான எஸ் அனந்தராமகிருஷ்ணன் அவர்கள், கடலூரில் கடந்த 16-ந் தேதியன்று நடைபெற்ற கரூர் இலட்சுமி விலாஸ் பாங்கியின் பண்ருட்டிக் கிளையின் 25-வது வருட விழாக் கொண்டாட்டத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"கடந்த ஒரு நூற்றாண்டாக இந்த நாட்டில் தனியார் தொழில் துறை, இந்நாட்டின் பொருளாதாரத்துறையில் மிகச் சிறந்த பங்கு பெற்றிருக்கிறது. இன்று, 'தனியார் துறை,' 'பொதுத் துறை,' என்ற இரு சொற்கள்பற்றி மக்களிடையே பற்பல தவறான கருத்துக்கள் நிலவி வருகின்றன பொதுத் துறையென்னும்போது, ஒரு சில பணக்காரர்களையோ, அல்லது பாங்கிகளில் கொஞ்சம் பணம் போட்டிருப்பவர்களையோ மட்டும் பொறுத்த ஒன்றல்ல அத்துறையில், ஒவ்வொரு சிறு கடைக்காரனும், சிறு சிறு வர்த்தகனும் உட்படுகிறான். இவர்கள் எல்லாம் ஒரு வார காலத்திற்கு மட்டும் தங்கள் தொழில்களையெல்லாம் நிறுத்திவிட்டார்களேயானால், நாட்டின் முழுப் பொருளாதாரமும் அப்படியே நின்றுவிடக்கூடும்.

'சாதாரண ஒரு சிறு வர்த்தகனை, 'கருஞ்சந்தைக்காரன்,' 'வரி செலுத்தாமல் ஏமாற்றுபவன்,' 'சமுதாயத்திற்குப் புறம்பானவன்' என்று பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்யப்படுகிறது; அதே நேரத்தில், இதற்கு உறுதுணையாகச் சர்க்காரும் வர்த்தகர் இனத்தின்மீது ஒரு வகையான அதிருப்தியையும் வெறுப்பையும் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

"வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களில் ஒரு சிலர் 'இழிமக்களா'கவும இருக்கலாம்; ஆனால் அரசியல் துறையிலும்கூட அத்தகைய இழிமக்கள் இருக்கிறார்களே? அதை யாரும் மறுக்கமுடியாதல்லவா? அதிகமாகச் சொல்வதானால், அரசியல் துறையில்தான் கூடுதலான அளவிற்கு 'இழிமக்கள்' இருக்கிறார்கள்! அந்தக் காரணத்தினாலேயே அவர்களையெல்லாம அரசியல் துறையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டார்களா? இல்லையே? எனவே, அவர்களைப்போலத்தான் வர்த்தகர்களும, இந்த நாட்டில் வாழ எல்லாவகையான உரிமையையும் பெற்றிருக்கிறார்கள். அந்த வர்த்தகர்கள், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க விரும்பாதவர்கள், அவர்களும் இந்த நாட்டில் வாழும் மக்களில் ஒரு பகுதியினர்.

தனியார் துறையும் இருக்கவேண்டுமாம்

"அவர்கள் மீதுள்ள தவறெல்லாம், இதுவரையிலும் அவர்கள் வாய்பேசாது ஊமையாக இருந்ததுதான்; ஆனால் அவர்களது வாய்பேசா மௌனநிலை மாறி, தங்கள் குரல் நாடுமுழுமைக்கும் கேட்கும்வகையில் அமைந்திருக்கவேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டிய கட்டத்தை வர்த்தகர்கள் அடைந்துவிட்டனர்.

"எனவே, பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இருசாராருமே தனித் தனியாகச் செய்தாகவேண்டிய பலப்பல வேலைகள் உள்ளன இரண்டு துறைகளுமே இயங்கத்தான் வேண்டும்; எக்காரணங் கொண்டும் அவைகளை இல்லாமல் செய்ய முடியாது."

தெரிந்துகொள்ளுங்கள்

சென்னைக்கு அருகிலுள்ள பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில் இரண்டாவது தடவையாக வரவழைக்கப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் நிர்மாணிக்கப்பட்டவுடன், அத்தொழிற்சாலையில் ஆண்டிற்கு 350 இரயில் பெட்டிகள் வீதம் உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய சோதனைப் பண்ணைகளுக்கு நிலம்

சொந்தக்காரரிடமிருந்து பெற சென்னை சர்க்கார் புதிய சட்டம்

சென்னை, டிச. 18—

அவசியமா சொத்துக்களை அரசாங்கம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளவோ, சர்க்காரின் உடைமையாக்கிக் கொள்ளவோ அதிகாரமளிக்கவும், அதற்கான குத்தகை தொகை, நஷ்டஈடு முதலியனவற்றை நிர்ணயிப்பது பற்றி ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தவும் சென்னை சர்க்கார் புதிய சட்டம் தயாரித்திருக்கிறது; இந்தச் சட்டம் 10 ஆண்டு காலத்திற்கு அமுலில் இருக்கும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அரசாங்கம் சில சோதனைப் பண்ணைகளை அமைக்க வேண்டியுள்ளதாம் அதற்கான நிலத்தை 'ஆர்ஜிதம்' செய்வதென்றால் அதிகச் செலவாகும்; ஆகவே, தேவையான நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்வதே சிக்கனமாக இருக்கும்; ஆனால், சொந்தக்காரர்கள் விருப்பமில்லாமல் ஒரு நிலத்தைக் குத்தகைக்குப் பெறமுடியாது; எனவே, 'கட்டாய முறை' மூலந்தான் தேவையான நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று, நியாயமான முறையில் அந்த நிலத்திற்குக் குத்தகை நிர்ணயிக்க சட்டம் அவசியமாகிறது; அவ்வாறு பெற்ற நிலத்தை, பின்னர் தேவையானால், நஷ்டஈடு கொடுத்து சர்க்காருக்குச் சொந்தமாகவும் ஆக்கிக்கொள்ளலாம்.

இலங்கையில் இருந்து வெளியேற்றப்படும் மக்கள் பிரச்சினை பெரிதல்ல?

குடியமைப்புத் திட்டத்திற்கு விசேட நடவடிக்கைகள் தேவையில்லையாம்!

மக்கள்சபையில் அமைச்சர் தரும் பதில்

புதுடில்லி, டிச. 18—

"இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு இந்தியா திரும்பியுள்ளவர்கள், தாங்கள் சம்பாதித்த சொத்துக்களுடன்—அவைகள் எப்படிப்பட்டவைகளாக இருப்பினும்—தங்கள் தங்கள் சொந்த மாவட்டங்களிலேயே திருப்பவும குடியமைப்பு வசதிகள் செய்துகொண்டுள்ளதால், அவர்களுக்கெனத் தனியாகக் குடியமைப்புத் திட்டம் பற்றியப் பிரச்சினை ஒன்றும் கிளம்பவில்லை; எனவே, அவர்களைக் குடியமைப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக ஏதாவது விசேட நடவடிக்கைகள் தேவை என்று கருதப்படவுமில்லை—மேற்கொள்ளப்படவுமில்லை,"

என்று,மக்கள் சபையில், வெளிநாட்டுத் துணை அமைச்சர் அனில் சந்த கூறியிருக்கிறார்.

'இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்களைக் குடி அமைப்புச் செய்ய இந்திய சர்க்கார் இதுவரை என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?' என்று பல உறுப்பினர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்திருக்கின்றனர்.

அவர்களுக்குப் பதில் கூறின அந்த அமைச்சர், 'இலங்கையிலிருந்து திரும்பும் மக்களுக்குக் குடியமைப்பு வசதி தரும் பிரச்சினை பெரிய ஒரு பிரச்சினையாகக் காணப்படுகிறதா இல்லையா என்பது குறித்து, அந்தந்த மாநில சர்க்கார்களிடமிருந்து இதுவரை எவ்விதத் தகவலும் இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் 7—ஊதிய போர்டுகள் ஏற்படுமாம்

நாகபுரி, டிச. 18—

அடுத்த சில வாரங்களில் மேலும் பல தொழில்களுக்கு 7-ஊதிய போர்டுகளை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

1956-ம் ஆண்டில் 6,550-இலட்சம் பவுண்டு தேயிலை இந்தியாவில் உற்பத்தியாயிற்று.

-**-***********

உறுப்பினர் புதுப்பித்தல்

*

திராவிட முன்னேற்றக் கழகத்தில், சென்ற தடவை உறுப்பினராயிருந்து, இரண்டாவது முறையாக இப்போது புதுப்பித்துக்கொள்ளாதவர்கள், 1956 டிசம்பர் திங்கள் 31-ம் நாளுக்குள் உறுப்பினராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளாவிடில், தாமாகவே கழகப் பொறுப்புகளிலிருந்தும் உறுப்பினர் உரிமையிலிருந்தும் நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை-13 24-11-'56. } பொதுச் செயலாளர், தி. மு.கழகம்

-************-**

கோவை பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத்

தேர்தல் நிதிக்கு முதல் தவணையாக ரூ. 1,125 தரப்பட்டது

கோவை, டிச 19—

கோவை நகர தி மு. கழகத்தின் சார்பில், கடந்த 16-ந் தேதியன்று மாலை 6 மணிக்குச் சிதம்பரம் பூங்காவில் தோழர் சி. எஸ். ஆர். மாணிக்கம் தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

துவக்கத்தில் தோழர்கள் சி டி தண்டபாணி, எஸ் ஏ இராசமாணிக்கம் ஆகியோர் சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினபின், தோழர் ஈ வெ. கி சம்பத் அவர்கள் பொதுத் தேர்தல் குறித்தும், எதிர்க்கட்சிகளின் நிலை குறித்தும், காங்கிரசாட்சியின் ஊழல்களை விவரித்தும் அரியதோர் சொற்பெருக்காற்றினார் கோவை நகரக் கழகச் சார்பில் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் ரூ. 895-ம, திருவள்ளுவர் படிப்பகச் சார்பில் தோழர் எம். சாமியப்பன் ரூ. 230-ம் ஆக மொத்தம் ரூ. 1,125 தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் தந்தனர்.

இந்நிதி, கோவை நகரத்தின் சார்பில் முதல் தவணையாகத் தரப்பட்ட தொகையாகும்

கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கார், இசைப் பெரும்புலவர் இராசரத்தினம், திரு மதனகோபால். தோழியர் விசாலாட்சி - இளம் வழுதி. கோவை 25-வது வட்டத் தோழர் இராசு ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. (ந. கி.)

தலைமை நிலையச் செய்தி:

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29—12—56

சனியன்றும்

பொதுக்குழுக் கூட்டம்

30—12—56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்

'அறிவகம்' சென்னை 5—12—56 } —தலைமைக் கழகம் (தி. மு. க.)

மத்திய சர்க்காரின் தவறான போக்கை மாநில அரசுகளும் பின்பற்றுகின்றன

'ஊர் சுற்றுவது' அமைச்சர்களுக்கு சர்வசாதாரணமாகிவிட்டது

மக்கள் சபையில் எச். வி. காமத் இடித்துரை

புதுடில்லி, டிச 18—

நேற்று நடைபெற்ற மக்கள் சபைக் கூட்டத்தில், உள்நாட்டு, செய்திப்போக்குவரத்து, உற்பத்தி, இயற்கைவள, விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளுக்கான செலவுகளுக்கு ரூ 22,57,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து நடைபெற்ற விவாதத்தின்போது, எச். வி. காமத் என்ற உறுப்பினர், 'மத்திய சர்க்காரில், பெரும் எண்ணிக்கையில் அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் இருப்பது நியாயமற்ற ஒன்றாகும்,' என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:—

'மத்திய சர்க்காரிலுள்ள மந்திரிகள், துணை மந்திரிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே வருவதானது, அதன் எதிரொலியாக, மாநில சர்க்கார்களிலுள்ள முதல் மந்திரிகளும் தங்கள் அமைச்சரவையை மேலும் விரிவுபடுத்திக்கொள்ளத் தூண்டுவதாக அமைந்துவிடுகிறது.

'இங்குள்ள மந்திரிகள் இந்த நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும்கூட சர்வசாதாரணமாக—அடிக்கடி சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

பரிசீலனை எப்போது முடிவடையும்?

சென்னை, டிச. 18—

பீடித் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு மசோதா தயாராகிவிட்டதாம். அதை மேற்கொண்டும் சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதாம்.

இந்தத் தகவலை தொழில் அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்தார்.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு :	ரூ. அ. பை
முன் (19—12—56) இதழ்ப்படி.	9,658—2—9

திருச்சியில்:

15—12—56 காலை திருச்சியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 1,112 : விவரம் வருமாறு :—

	ரூ.	அ.	பை.
திருச்சி நகர தி. மு. கழகம்	850	0	0
பாலக்கரை, எடத்தெரு தி. மு. கழகம்	88	0	0
பாலக்கரை பாத்திர வியாபாரிகள்	61	0	0
கல்லக்குடி தி. மு. கழகம்	51	0	0
வெள்ளனூர் „	35	0	0
மருதூர் „	10	0	0
உறையூர் மறுமலர்ச்சி மன்றம்	5	0	0
தனிப்பட்டவர்கள் சில்லறையாகக் கொடுத்தது	9	0	0
பிடிக்கட்டு விற்பனை மூலம்	3	0	0

மதுரையில் :

15—12—56 இரவு மதுரையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 2,000 : விவரம் வருமாறு : —

	ரூ.	அ.	பை.
மதுரை நகர தி. மு. கழகம்	1,000	0	0
தனிப்பட்ட தோழர்கள் சில்லறையாகக் கொடுத்தது	107	0	9
மதுரை தாளமுத்து-நடராசன் படிப்பகம் தெற்குவாசல்	155	6	0
மதுரை பருப்பு தயாரிப்பவர்கள்	122	0	0
அம்மன் சந்நதி வர்த்தகத் தொழிலாளர்கள்	101	0	0
அழகாடி வேலாயுதம் நினைவுப் படிப்பகம்	81	8	0
கொடைக்கானல் மோட்டார் யூனியன் தொழிலாளர்கள்	44	3	3
சோழவந்தான் தி. மு. கழகம்	41	0	0
மத்திய வட்டாரம் எம். ஜி. ஆர். மன்றம்	40	0	0
திருப்பரங்குன்றம் திராவிடப் பகுத்தறிவு மன்றம்	30	0	0
சத்திரப்பட்டி அறிவுப்பூங்கா	25	0	0
வெள்ளரிப்பட்டி தி. மு. கழகம்	25	0	0
மத்திய வட்டாரம் சிந்தனைச்செல்வன் மூலம்	25	0	0
ஒத்தக்கடை தி. மு. கழகம்	20	0	0
வடக்குமாசி வீதி மறுமலர்ச்சிக் கழகம்	20	0	0
மதுரை-ப. சுந்தரம்	15	10	3
மதுரை இளங்கோ மன்றம்	11	0	0
நடராசன் நினைவுப் படிப்பகம் கல்லக்குடி	10	0	0
கீழ்ச்சந்தைப்பேட்டை அண்ணா இலவசப் படிப்பகம்	10	0	0
மாடக்குளம் முத்து இளைஞர் படிப்பகம்	10	0	0
மதுரை மஜீத் படிப்பகம்	10	0	0
குளமங்கலம் வள்ளுவர் படிப்பகம்	10	0	0
மதுரை முத்து படிப்பகம்	10	0	0
வி. எஸ். இராசன்-கீழமாசிவீதி, மதுரை	10	0	0
இரும்புக்கடை கோபால் „ „	7	11	3
மதுரை சப்பாணி கோயில்தெரு தி. மு. கழகத் தோழர்கள்	6	12	6
சிந்தாமணி ரோடு சங்கரன் கைநெசவுத் தொழிலாளர்கள்	6	12	0
கீழ்ச்சந்தைப்பேட்டை-இரா. தங்கராசன்	5	0	0
„ கி. முனுசாமி	5	0	0
மதுரை ஒளி ஓவியம்	5	0	0
தோப்பணம்பட்டி தி. மு. கழகம்	5	0	0
மதுரை மறுமலர்ச்சிக் கழகம் கீழமாசிவீதி	5	0	0
„ பி. செங்குட்டுவன்	5	0	0
இராசபாளையம் வடிவேல்	5	0	0
அருப்புக்கோட்டை ஞானகுருசாமி	5	0	0
மதுரை பாலராசு கடலைக்கடை	5	0	0

ஆக மொத்தம் ரூ. 12,770—2—9

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

அரசாங்கத்தின் கொள்கை அதுவல்லவாம்!

புதுடில்லி, டிச. 18—
'இந்திய புராதனப் பொருள் இலாகாவின் வசமுள்ள கோயில்களையும் மசூதிகளையும் பொது மக்களுக்குத் திறந்துவிடுவதோ, பூசைகள், தொழுகைகள் நடத்துவதற்கு அனுமதி தருவதோ அரசாங்கத்தின் கொள்கையல்ல' என்று மாநிலங்கள் சபையில் உதவி கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

தேர்தலில் கம்யூனிஸ்டுகள்

புதுடில்லி டிச. 15—
பொதுத் தேர்தலில கம்யூனிஸ்டு கட்சி 500-லிருந்து 600 தொகுதிகளுக்கு அபேட்சகர்களை நிறுத்தக்கூடுமாம்!

இவர்களில் பெரும்பாலானோர் மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் போட்டியிடுவார்களாம்!

சென்னை மாநிலத்தில் 40 அபேட்சகர்களை மட்டுமே நிறுத்த முடிவு செய்துள்ளார்களாம்!

கழகக் கூட்டங்கள்

☆

திருவெண்ணெய்நல்லூர்:
22—12—56 மாலை 5 மணிக்கு
தலைவர் : கி. குமாரசாமி
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ.,
டி. என். ஜி அண்ணாமலை
தி. வ. அண்ணாதாசன்

☆

சேலம் 7-வது வட்டம் :
தெய்வநாயகம் பிள்ளைத் தெரு பெருமாள்கோவில் முன்னிலையில்
22—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். திருவேங்கடம்
பேசுவோர் :
கி. மனோகரன்
ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். மெய்யப்பன்

★

சென்னை—கீழ்ப்பாக்கம்
கார்டன் ரோடு திடலில்
(வாட்டர் டாங்க் அருகில்)
22-வதுவட்ட தி. மு. கழக 4-வது ஆண்டுவிழா
21—12—56 மாலை 6-மணிக்கு
தலைவர் : கோ. இளவரசு
பேசுவோர் :
அண்ணா
என். வி. நடராசன்
ஏ. கே. சாமி
கூட்டத்தில் தி மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

சென்னை பி. & சி. ஆலை

தி.மு. கழக தேர்தல் நிதிக்குழு உறுப்பினர்கட்கு:

"25—12—56-ல், நமது ஆலைத் தோழர்கள் சார்பில் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் சென்னை ஓட்டேரியில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளனர். எனவே நிதிக்குழு உறுப்பினர்களனைவரும் தாங்கள் வசூலித்த தேர்தல் நிதியையும் நன்கொடை இரசீதுப் புத்தகங்களையும், 23—12—56-க்குள் சேர்த்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, சென்னை பி. அண்டு சி ஆலை தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி அறிவிக்கிறார்

மணப்பாறை தி. மு. கழக—மாணவர் கிளைப் பொதுக்கூட்டம்

22—12—56 மாலை 6 மணிக்கு, மணப்பாறை பழைய சந்தைத் திடலில், தி. மு. க.-மாணவர் கிளைச் சார்பில் தோழர் இரும்பொறை தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சிற்றரசு-சுப்பிரமணியம், ஜோசப், செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அ. பொன்னம்பலனார் சுற்றுப்பயணம்

டிச. 22, 23, 24 : புதுச்சேரி சுற்றுப்புறக் கிராம தி. மு. கழகக் கிளைகள் துவக்க விழா
„ 29, 30 : சேலம்

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
23-12-56 முதல் 20-1-57 வரை

★

★ ரேக்லா, சைக்கிள், ஓட்டப் பந்தயங்கள், சர்க்கஸ், ஓவியக்கலை, தந்திரக் காட்சிகள் !

★ ஈ. வி. சரோஜா, குசலகுமாரி, ராதா ராணி, சாயி-சுப்புலட்சுமி —நாட்டியங்கள்

★ கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு

★ எம். ஜி. இராமச்சந்திரன் சிவாஜி கணேசன்
கே. ஆர். இராமசாமி எம். ஆர். இராதா
எஸ்.எஸ். இராசேந்திரன் கே.ஏ. தங்கவேலு
என். எஸ். கிருஷ்ணன் ஃபிரண்ட் ராமசாமி
—& குழுவினரின் நாடகங்கள்

★

10—1—57 அன்று அண்ணா அவர்கள் நடிக்கும்
சந்திரமோகன் —நாடகம்

★ மற்றும் பல இனிய காட்சிகள் !

நுழைவுக் கட்டணம் : ரூ. 0—5—0

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

பழி சுமத்தும் பண்பு?

சென்னை, டிச. 20 —
'கோயில் அதிகாரிகள் பதவிகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களை அதிக அளவில் நியமிக்க அரசாங்கம் விரும்பியும், தகுதியுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தப் பதவிக்கு முன்வரவில்லை' என்று அமைச்சர் பரமேசுவரன் சட்டசபையில் கூறியுள்ளார்.

பதவியிலிருந்து விலகும் கோயில் அதிகாரிகளுக்கு உதவிச் சம்பளம் அளிப்பதுபற்றி அரசாங்கம் யோசித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

கோயில் நிர்வாகிகளுக்கு பிராவிடன்ட் நிதி வசதி

சென்னை டிச. 18—
'ஆலயங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு 'பிராவிடண்ட்' நிதி வசதியை ஏற்படுத்த அரசாங்கம் ஒரு திட்டத்தைப் பரிசீலித்து வருகிறது' என்று அமைச்சர் பரமேசுவரன் சட்டசபையில் தெரிவித்தார்.

குட்ட ரோகத்தினருக்குக் குடியிருப்பு ஏற்படும்

சென்னை, டிச. 19—
சென்னை மாநிலத்தில், வடஆற்காடு மாவட்டத்தில், குட்டரோகத்தினர் குடியிருப்பு ஒன்று ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ. 53,000 தேசிய வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடியிருப்பு 5 பிரிவுகளைக் கொண்டிருக்கும். அங்கு நோயாளிகளுக்காக 10 படுக்கைகள் இருக்கும்.

தேர்தல் நிதியை நேரில் கொண்டுவரும் தோழர்கட்கு: வேண்டுகோள்

தேர்தல் நிதியை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தில் நேரடியாகக் கொண்டு வந்து கொடுக்கும் தோழர்கள்—குறிப்பாகச் சென்னை நகரத் தோழர்கள் பெரும்பாலும் காலணா, அரையணா சில்லறைகளாகவே கொண்டு வந்து தருகின்றனர்.

கூடுமானவரை, ரூபாய் நோட்டுக்களாகவே கொண்டுவந்து செலுத்துமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

—பொறுப்பாளர்

சிற்றரசு-சுப்பிரமணியம் நிகழ்ச்சிகள்

டிச. 22 : மணப்பாறை
23 : செங்கிரி
24 : மூராசபுரூர்
26 : வெண்ணந்தூர்

பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

30—12—56-ல் சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில நடைபெற இருந்த தி மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம், சேலம் பொதுக் குழு காரணமாக, 6—1—57-க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சென்னையின் புதிய ஷெரீப்

புதுடில்லி டிச 19—
1956 டிசம்பர் 20-ந்தேதி முதல், சென்னையின் புதிய 'ஷெரீப்'பாக மேரி கிளப்வாலா ஜாதவ் அம்மையாரை சென்னை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில் இவருக்கு முன்பு 'ஷெரீப்' பதவியில் இருந்தவர் காஸ்டல் என்னும் வெள்ளையர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கிளைக் கழக நிர்வாகிகளின் கவனத்திற்கு!

பொதுச்செயலாளரின் அறிக்கைப்படி, தேர்தல் வாரத்தில் திரட்டிய தொகையைப் பொதுக்கூட்டம் நடத்தி அதன் மூலம் அளிப்பதென்று சில கிளைகள் எண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது. இத்தொகையைப் பொதுக்கூட்டங்களுக்கோ, வேறு எந்த நிகழ்ச்சிகளுக்கோ பயன்படுத்தாமல், உடனே முழுத் தொகையையும் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு எல்லா கிளைக் கழக நிர்வாகிகளையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். மாவட்ட நிர்வாகிகளும் இதனைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.